இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29-05-2025

# இழிவைத் துடைக்கும் பேரியக்கம்

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பது வள்ளுவம். இரத்த பேதம் இல்லை, பால் பேதம் இல்லை என்பது பெரியாரியம். இதற்காகவே இயக்கம் தொடங்கினார் தந்தை பெரியார். இழிவுபடுத்துதல் என்பது சொற்களில் இருந்து தொடங்குவதாக அவர் கருதினார். சூத்திரச் சொல்லுக்கு எதிரான போராட்டத்தை தனது இறுதிநாளில் மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டும் உழைத்தார்.

**நீதிக்கட்சி ஆட்சி அதற்கும் முன் வரலாற்றுச் சிறப்புமிக்க சில அரசாணைகளைப் பிறப்பித்தது. பஞ்சமர், பறையர் என்ற சொற்களை நீக்கும் ஆணையை வெளியிட்டது நீதிக்கட்சி ஆட்சி. அரசு ஆணை எண் 817 சட்டம் (பொது) நாள் 25.3.1922 மூலம் பஞ்சமர், பறையர் என்று தொல் திராவிடர் குடியினரை அழைக்கும், எழுதும் மரபை நிறுத்திற்று. தமிழில் ‘ஆதி திராவிடர்’ என்றும் தெலுங்கில் ‘ஆதி ஆந்திரர்’ என்றும் அவர்களைக் குறிப்பிடவேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.**

**” At the meeting of the Legislative Council held on the 20th January 1922, the following resolution was passed. “That this council recom mended to the government that the terms ‘Panchamas’ or ‘Paraya’ used to designate the ancient dravidian community in Southern India should be deleted from Government records c., and the term ‘AdiDravida’ in the Tamil and ‘AdiAndhra’ in Telugu districts e substitute instead”** என்பது அந்த அரசாணையாகும். சொற்களை நீக்குதல் மட்டுமல்ல; அனைத்தையும் அனைவர்க்குமான ஆக்கும் பல்வேறு அரசாணைகளை நீதிக்கட்சி ஆட்சி பிறப்பித்தது. இதன் தொடர்ச்சியாக இயங்கினார் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரும், அவர் தம் நண்பர் கைவல்யமும் ஒரு திருமண வீட்டில் உணவு உண்டு கொண்டிருந்தபோது, ‘சூத்திரன் குடித்த குவளையைத் தொடாதே’ என்று ஒருவன் சொன்னான். சோத்துக் கையால் அவன் முகத்தில் அறைந்தார் கைவல்யம். ‘சூத்திரன் என்று சொன்னால் ஆத்திரம் கொண்டு அடி’ என்ற முழக்கம் அதில் இருந்துதான் வந்தது.

1927 ஆம் ஆண்டு சென்னை மாகாண அரசு விளம்பரத்தில் ‘சூத்திராள்’ என்ற சொல் இருந்தது. இதனைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டார் தந்தை பெரியார். மாநாடுகளில் தீர்மானம் போடப்பட்டது. ‘சூத்திராள்’ என்று போடப்பட்டிருந்த விளம்பரங்கள் சில இடங்களில் நீக்கப்பட்டு வருவதாக ‘குடிஅரசு’ (16.10.1927) இதழில் செய்தி வெளியாகி உள்ளது. இதன் பிறகு நீதிக்கட்சி ஆட்சி சூத்திரன் என்ற சொல்லை நீக்கி உத்தரவிட்டது. அதன்பிறகு ஆவணங்களில் சூத்திரன் என்ற சொல்லை பயன்படுத்துவது நிறுத்தப்பட்டது.

1957ஜூலை11அன்றுதமிழ்நாடுசட்டமன்றத்தில்பேசியமுத்தமிழறிஞர் கலைஞர், “சாணான், வண்ணான் என ‘ன்’ போட்டு அவமானப்படுத்தும் வகையில் இருக்கிறது. இதனை நீக்கி ‘ர்’ போட வேண்டும்” என்று கோரிக்கை வைத்தார். அப்போது குறுக்கிட்ட அமைச்சர் கக்கன், “மத்திய அரசில் அப்படித்தான் இருக்கிறது. ‘ன்’ போடுவதால் இழிவு ஏற்பட்டு விடாது” என்று பதில் அளித்தார்.

தி.மு.க. ஆட்சியில் இதற்கு முற்றுப்புள்ளி வைத்தார் முதலமைச்சர் கலைஞர். 10.12.1975 அன்று முதலமைச்சர் கலைஞர் ஒரு அரசாணை வெளியிட்டார். சாதிப் பெயர்களில் இருந்த ‘ன்’ நீக்கப்பட்டு, ‘ர்’ என மாற்றப்பட்டது. “சாத்திரத்தின் பேர்களிலும் சரித்திரம் படைக்க முடியும் என்பதை நிரூபித்தோம்” என்று முதலமைச்சர் கலைஞர் குறிப்பிட்டார்.

இதோ இப்போதும் இழிவு நீக்கும் போராட்டத்தைத் தொடர்ந்து செய்து வருகிறார் திராவிட மாடல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் 29.04.2025 அன்று உரையாற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் **“இந்த மண்ணின் ஆதிக் குடிகளை இழிவுபடுத்தும் அடையாளமாகக் காலனி என்ற சொல் பதிவாகியிருக்கிறது. ஆதிக்கத்தின் அடையாளமாகவும் தீண்டாமைக்கான குறியீடாகவும் வசைச் சொல்லாகவும் இது மாறியிருப்பதால் இனி இந்தச் சொல் அரசு ஆவணங்களிலிருந்தும், பொதுப் புழக்கத்திலிருந்தும் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்”** என்று அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேரில் சந்தித்து ஒரு கோரிக்கையை வைத்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்காக (1/5) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் உள்ளனர், தமிழ்நாட்டின் சாதிப் பெயர் பட்டியலில் 76 ஆதிதிராவிடர் சாதிப் பெயர்களும், 37 வகையான பழங்குடியினர் சாதிப் பெயர்களும், அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் தங்கள் சாதிப் பெயரில் இறுதி எழுத்து ‘N’ மற்றும் ‘A’ என முடிவதால், சாதிப் பெயரை ஒருமையுடன் குறிப்பிடுவதாக இருப்பதாகவும் எனவே சமூகத்தில் உரித்த பெருமை கிடைக்கப் பெறவில்லை என கூறி ‘N’ மற்றும் ‘A’ என்பதற்குப் பதிலாக ‘R’ என பெயர் மாற்றம் செய்து தங்களுக்கு உரிய மரியாதையைப் பெற்றுத் தருமாறு அரசிடம் கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். தமிழ்நாடு அரசு மேற்காணும் சாதிகளில் உரிய பெயர் மாற்றம் செய்ய சட்டமியற்றுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் ‘N’ மற்றும் ‘A’ என்பதற்குப் பதிலாக ‘R’ என பெயர் மாற்றம் செய்து மக்களுக்கு உரிய மரியாதையை கிடைக்க வழி செய்யும் வண்ணம் உரிய சட்டம் இயற்ற, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது”** என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்த கோரிக்கையாகும்.

**டெல்லிப் பயணம் என்பது நிதி கேட்கும் பயணம் மட்டுமல்ல; நீதி கேட்கும் பயணம் ஆகும். ‘திராவிட மாடல்’ ஆட்சி என்று ஏன் சொல்கிறோம் என்றால் இதனால்தான். ‘திராவிட’ என்று சொன்னால் சிலருக்கு ஏன் எரிகிறது என்றால் இதனால்தான். இதையெல்லாம் பேசுவதற்கு இந்த இயக்கம்தான் இருக்கிறது என்ற கோபம்தான் காரணம். இவர்கள் இதனைத் திரும்பத் திரும்ப பேசுகிறார்களே என்ற ஆத்திரம்தான் காரணம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.5.2025) கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த 350 மாணவ, மாணவியர்களுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் 100 பயனாளிகளுக்கு கண்ணாடிகளை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அ.வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியின் தலைமை நிர்வாக அதிகாரிகள் நரேந்திரன் மற்றும் திருமதி. ஹெலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்மூலம், தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தின் கீழ் தென்கொரியா நாட்டின் பல்கலைக் கழகங்களில் உலகளாவிய செயல்முறை பயிற்சி பெற்று வந்த 6 மாணவ, மாணவிகள் சந்தித்து, தாங்கள் பெற்ற பயிற்சி குறித்து கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் — தமிழ்நாட்டில்

# இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 29 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.5.2025) தலைமைச் செயலகத்தில் ‘நான் முதல்வன்’ திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தின் கீழ் தென் கொரியா நாட்டின் பல்கலைக் கழகங்களில் உலகளாவிய செயல்முறை பயிற்சி பெற்று வந்த 6 மாணவ, மாணவிகள் சந்தித்து, தாங்கள் பெற்ற பயிற்சி குறித்து கலந்துரையாடினார்கள்.

முதலமைச்சர் அவர்கள் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக உருவாக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வி பயின்ற அனைவரும் உயர்கல்வி பயில வேண்டும் என்பதற்காக புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

உயர்கல்வி பயின்ற மாணவர்கள் நல்ல வேலைவாய்ப்பு பெறவும், திறன்மிக்க மாணவர்களாக உருவாக்கவும் உலகளாவிய செயல்முறை பயிற்சி வாய்ப்புகளை வழங்க தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தினை (Scholar ships for Outstanding Undergrad uate Talent in Tamil Nadu) செயல்படுத்தி வருகின்றார்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டில் இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் சிறந்த திறமையாளர்களுக்கு உதவித்தொகை வழங்கும் (ஸ்கவுட்) திட்டத்தின் கீழ், பயோ மெடிக்கல் மற்றும் நானோ பொருட்களின் ஆற்றல் பயன்பாடுகள், சூரிய மின்கல தொழில்நுட்பம் மற்றும் நிலையான ஆற்றல் கண்டுபிடிப்புகள் தொடர்பான மேம்பட்ட ஆராய்ச்சி பயிற்சிக்காக இணையதளம் வாயிலாக விண்ணப்பித்த மாணவ, மாணவிகள் அவர்கள் கல்லூரி படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில், நடத்தப்பட்ட நேர்காணல் மூலம் 6 மாணவ, மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு, அரசு செலவில் தென் கொரியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

தமிழ்நாட்டின் பல்வேறு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சேர்ந்த இயற்பியல் மற்றும் வேதியியல் பயின்று வரும் 2 மாணவர்கள் மற்றும் 2 மாணவிகளுக்கு தென்கொரியா நாட்டின் கச்சோன் பல்கலைக் கழகத்தின் பயோ - நானோ பயன்பாட்டு ஆராய்ச்சி மையத்தில், இந்த மாதம் 9 தேதி முதல் 24 தேதி வரை நானோ பொருட்களின் தொகுப்பு மற்றும் பண்புகளில் ஈடுபடும் நானோ பொருட்களின் உயிரி மருத்துவம் மற்றும் ஆற்றல் பயன்பாடுகள் தொடர்பான மேம்பட்ட ஆராய்ச்சி முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், இயற்பியல் துறையைச் சேர்ந்த 2 மாணவர்களுக்கு தென்கொரியா நாட்டின் பூசன் தேசிய பல்கலைக் கழகத்தில் இந்த மாதம் 9 தேதி முதல் 24 தேதி வரை மேம்பட்ட நிலையான எரிசக்தி ஆய்வகத்தில் (ASEL) சூரிய மின்கல தொழில்நுட்பம் மற்றும் நிலையான எரிசக்தி கண்டுபிடிப்புகளை மையமாகக் கொண்ட பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சிகளின் காரணமாக பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகள் தென்கொரியா நாட்டின் கச்சோன் மற்றும் பூசன் பல்கலைக்கழகங்கள் அல்லது தென் கொரியா நாட்டின் பிற பல்கலைக் கழகங்களில் முதுகலை பட்டப் படிப்பைத் தொடர வாய்ப்பு கிடைத்துள்ளது.

பயிற்சி பெற்ற மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடிய துணை முதலமைச்சர் அவர்கள் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்தும், பயிற்சி பெற்றது குறித்தும் கேட்டறிந்தார். தமிழ்நாட்டில் இருந்து வந்திருப்பதாக தெரிவித்தபோது தென்கொரிய பல்கலைக் கழகங்களின் பேராசிரியர்களும், மாணவர்களும் மிகுந்த மகிழ்ச்சியும், வரவேற்பும் அளித்தனர், இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாணவ, மாணவிகள் நன்றி என்று தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுடெல்லியில், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் முனைவர் எஸ்.ஜெய்சங்கர் தலைமையில் நடைபெற்ற வெளியுறவுத்துறை அமைச்சகத்திற்கான ஆலோசனைக் கூட்டத்தில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கலந்து கொண்டார். உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.